இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் ~ பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி VI, பதிப்பு 17 - ஏப்ரல் - ஜீன் 2019
Formally UGC Approved Journal (64089), © Author

# சீவகசிந்தாமணியில் புலப்பாட்டு உத்திமுறை

**முனைவர்.செ.கல்பனா**
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை
தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி, சென்னை

## முன்னுரை

கனவு என்பது மனிதர்களின் வாழ்வில் வரும் நன்மையையும் துன்பத்தையும் உணர்த்துவதற்காக கடவுள் அனுப்பும் முன் எச்சரிக்கையாகும்.நன்கு கற்றறிந்த அறிவியலாளர்களும் இவற்றையே நம்பியிருந்தனர்.ஆங்கில நாடக மேதையாக திகழ்ந்த சேக் பியரும் தமிழ் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகளும் இவற்றின் அடிப்படையில் தான் தன் காப்பியத்தினை இயற்றினார். காப்பியங்களில் கனவானது பெரும்பங்கு வகிக்கின்றன.காப்பிய கதை வளர்ச்சிக்கும் நிகழ்ச்சி பின்னல்களுக்கும் கனவுகள் சிறந்த உத்தியாக பயன்படுத்தப்பட்டுள்ளன.கனவினை ,காப்பியங்களில் நிகழப்போவதை உரைக்கும் உத்தியாக காப்பிய ஆசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர்.அச்சத்தோடு அல்லது ஆர்வத்தோடு ஒன்றை எதிர்பார்பதற்கு ஒரு கருவியாகவும் பின்னாளில் நிகழப்போவதை முன்கூட்டியே ஓரளவு குறிப்பாக அறிந்து கொள்வதற்க்கு ஒரு வாய்ப்பாகவும் கதையையோ காப்பியத்தையோ நடத்திச் செல்வதற்க்கு ஒரு கலை நுட்பமாகவும் கனவை காப்பிய ஆசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர்,என்பது உண்மையாகும்.

**தொல்காப்பியர்-கனவு**

‘’வினவுவார்க்கு ஏதில சொல்லிக் கனவு போல்
தெருளும் மருளும் மயங்கி வருபவை’’

எனும் இந்நூற்பாவில் கனவின் தன்மையை விளக்கும் நிலையில் மயக்கம்,உறக்கம்,பொய் ஆகிய கனவுத் தொடர்புடைய சொற்களை தொல்காப்பியத்தில் கனவின் காட்சியாக எடுத்துரைக்கின்றார் தொல்காப்பியர்.மேலும் கனவின் நம்பிக்கையை தொல்காப்பியர்,

**காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும் (தொல்.1061:6)**

என்கிறார்.அதாவது தலைவியின் காதல் மிகுதியாலே ,கனவில்,தலைவி புலம்புவதைத் தாய் கேட்க நேரிட்டது என்றும் ,தலைவனானவன் தலைவியின் கனவில் பேசுவதுண்டு என்பதை ,

**’’கனவும் உரித்தால் அவ்விடத்தான (தொல்:1143)**

எனவும் , கண்கள் உறங்க மறுத்து கனவில் மயங்கியிருந்ததனை

**’’கண் துயில மறுத்தல் கனவொடு மயங்கல்(தொல்.1216:5)**

எனவும் கூறுகின்றார். இலக்கியத்தில் கனவுகள் பெரும்பாலும் பின் நிகழ்வனவற்றை முன்னுணர்த்தும் நிலையிலேயே அமைகின்றன.இலக்கியக் கனவுகளில்

தீமையை முன்கூட்டி உணர்த்துகின்றவைதான் மிகுதி.அவ்வகையில் சீவக சிந்தாமணியில் பெண்களின் கனவு எவ்வித முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன என்பதை இரட்டைக் காப்பியக் கனவுகளுக்குப் பின் காணலாம்.

**இரட்டைக் காப்பியத்தில் கனவு**

**சிலப்பதிகாரம்**

தமிழர் ஊழ்வினையின்பால் நம்பிக்கை உடையவராய் இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. சிலப்பதிகாரத்தில் மூன்று கனவுகள் எடுத்துரைக்கப்படுகின்றன.கண்ணகி, கோவலன்,பாண்டிமாதேவி ஆகிய மூவரும் காணும் கனவுகள் பற்றி முறையே கனாத்திறம் உரைத்த காதை,அடைக்கலக் காதை,வழக்குரைக் காதை என்ற பகுதிகளில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.இக்கனவானது காப்பியத்தின் பின் நிகழ்வுகளை முன்னரே காட்டும் தன்மையினைக் கொண்டுள்ளன.மேலும் காப்பியக் கதைப்போக்கிற்கு உரமூட்டுவதாக அமைகின்றன.

**’’கடுக்கும் என் நெஞ்சம் கனவினால்,என்கை**
**பிடித்தனன் போய் ஓர் பெரும்பதியுள் பட்டேம்,**
**பட்ட பதியில் படாததொரு வார்த்தை……………’** *(சிலம்பு-45-48)*

கண்ணகி,தேவந்தியிடம் தான் கண்ட கனவினைக் கூறுகின்றாள்.அக்கனவு யாதெனின் நானும் என் கணவரும் ஒரு பெரு நகருள் நுழைந்தோம்.அவ்வூர் மக்களால் பெரும்பழி பெற்று,அதனால் கோவலனுக்கு ஒரு துன்பம் உண்டாயிற்றெனக் கேள்விபட்டு அரசனிடம் சென்று வழக்குரைத்தேன்.அதனால் அவ்வூருக்கும் அரசனுக்கும் தீங்குண்டாயிற்று,என்று கண்ணகி தேவந்தியிடம் கூறினாள்,என்ற இப்பாடல் கனத்திறம் உரைத்த காதையில் இடம் பெற்றுள்ளன.இக்கனவால் கண்ணகி, கோவலன் மதுரை செல்வதும்,மதுரையில் கோவலன் , கள்வன் எனக் கூறப்பெற்றுக் கொலையுண்டதும் கன்ணகி பாண்டியனிடம் வழக்குரைத்ததும், பாண்டியன் இறந்ததும் மதுரை தீயிற்க்கு இரையானதும்,பின்பு கோவலனும் கண்ணகியும் வானுலகம் அடைதலும் அவள் கண்ட கனவாக அமைவதையும் காணமுடிகின்றது.இவள் கண்ட கனவே சிலப்பதிகாரத்தின் திருப்புமுனையாக அமைந்தது.ஆகவே ஒரு பெண்ணிற்க்கும் கனவிற்க்கும் உள்ள தொடர்பு மிகவும் நெருக்கமானது என்பதை சிலப்பதிகாரம் வழி அறிய முடிகின்றது.

**மணிமேகலை**

**மாதவியின் கனவு**

**காமன் கையறக் கடநவை அறுக்கும்**
**மாபெருந் தவக்கொடி ஈன்றனை என்றே,**
**நனவே போலக் கனவகத்து உரைத்தேன்** **(மணி.**7:36-38)

என்று,இம்மணிமேகலைப் பாடல் மாதவி கண்ட கனவுச் செய்தியை எடுத்துரைக்கின்றது.மணிமேகலையில் ,மாதவியின் கனவிலே மணிமேகலைப் பிறந்த வேளையிலே மணிமேகலா தெய்வம் தோன்றி ‘காமனும் செயலற்றுப் போகுமாறு,பெரும் துன்பங்களைப் போக்கும் மிகப் பெரிய தவக்கொடியினை நீ பெற்றனை’ என்று துயிலெழுப்பிய காதை கூறுகின்றது.மணிமேகலா தெய்வம் கனவில் கூறியதைப் போலவே மணிமேகலையும் மக்களின் துன்பங்களைப் போக்கி வாழ்கின்றாள்.

**சீவக சிந்தாமணியில் கனவு**

ஐம்பெருங்காப்பியங்களுள் சீவக சிந்தாமணி காலத்தால் முதன்மையானதாகும்.வடமொழியில் உள்ள சீவகன் கதைகள் பலவற்றைப் பின்பற்றித் தமிழில் இயற்றப்பட்ட நூலாகும்.இந்நூலிற்கு முதல் நூல் ’’க்ஷத்திர சூடாமணி’’ஆகும்.இந்நூல் 3145 பாடல்களைக் கொண்டது.இந்நூலில் கனவு எவ்வித முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது என்பதையும் , மேலும் அக்கனவினால் சச்சந்தனும் கட்டியங்காரனும் அரசை இழக்க நேரிட்டது என்பதையும் பின்வருமாறு காணலாம்.இந்நூலில் இடம் பெற்ற கனவுகள் காப்பியத்தின் கதையோட்டத்திற்க்கும் , பின்

விழைவுகளுக்கும் துணைபுரிவதோடு கதைக்கருவாகவும் அமைகின்றன. இந்த வகையிலே இக்கப்பியத்திலே விசையைக் கண்ட கனவாக நாமகள் இலம்பகத்தில் ஒன்பது பாடல்களும் கேமசரியார் இலம்பகத்தில் கேமசரி கண்ட கனவாக ஒரு பாடலும் கட்டியங்காரனின் காமக்கிழத்தி கண்ட கனவாக ஒரு பாடலும் என பதினொரு பாடல்கள் கனவினை உணர்த்தும் பாடல்களாக அமைந்துள்ளன. இக்கனவே அரசனின் வீழ்ச்சிக்கும், அவனது பிள்ளைகளின் வரவிற்க்கும் கருவாக அமைந்தன.

**விசையை கண்ட கனவு**

காலைப்பொழுதினிலே விசையை மூன்று கனவுகளைக் கண்டாள். அக்கனவுகள் மீண்டும் மீண்டும் மனதிலே தோன்றியதால் அஞ்சி நடுங்கினாள்.

***’’தொத்தணி பிண்டி தொலைந்தற வீழ்ந்த துளண்***
***முத்தணி மாலை முடக்கிட னாக***
***ஒத்ததன் றாள்வழி யேமுளை யோங்குபு***
***வைத்தது போல வளர்ந்ததை யன்றே’’(சீவக.நாமக:223)***

இப்பாடல் விசையை கண்ட கனவைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றது.

1. ஓர் அசோக மரத்தின் கிளைகள் முறிந்து கெட அடி சாய்ந்து விழுந்தது.
2. மரத்தின் வேரிலே நட்டு வைத்தது போல ஓர் அசோகக் கன்று
3. அசோக மரத்தைப் போல எட்டு முத்துமாலையை உடையதொரு மணிமுடியைத் தாங்கி ஓங்கி வளர்ந்தது,என தான் கண்ட மூன்று கனவுகளையும் கூறுகிறாள். அக்கனவினைக் கேட்ட சச்சந்தன் கனா நூலின் வழியாக அந்தக் கனவுகளின் பொருளினை அறிந்து அவற்றில் நல்லனவற்றை மட்டும் விசையையிடம் கூறினான். விசையயே நீ கனவில் கண்ட நன்முடி உன் மகனாகும். மணமிகு எட்டு மாலைகள் அவனால் மணக்கப்படும் எட்டு மங்கையர் ஆவார். முளைத்த அசோகக்கன்று உன் மகனின் ஆக்கமாகும் என மூன்றாக்கிக் கூறி நிறுத்தி அசோகமரக் கிளை அடி சாய்ந்ததன் பயனைக் கூறாமல் விட்டான்.அசோக மரம் முறிந்து வீழ்ந்ததன் பயன் யாது?என்று விசையை கேட்டாள்.அதற்கு சச்சந்தன் பெண்ணே! அத்தகைய ஒரு தீங்கு எனக்கு இப்போதே வர இருப்பதை அது குறித்தது என்று கூறினான். சிந்தாமணியின் ஆசிரியர் மேற்கண்டவாறு விசையை கண்ட இம்மூன்று கனவுகளையும் காப்பியக்கதையை வெளிப்படுத்தும் உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார்.

**கேமசரி கண்ட கனவு**

நின் மகள் எவனைக் கண்டு நானுகிறாளோ அவ்வாடவனே அவளுக்கு கணவன் ஆகுவன், என்று சோதிடன் கணித்துச் சொல்ல கேமசரியின் தந்தை சுபத்திரன் பல்வேறு ஆடவர்களை தன் மனைக்கு வரவழைத்து உபசரிக்கின்றான்.ஆனால் இவர்களைக் கண்ட கேமசரி நாணங் கொள்ளாததை எண்ணி வருந்துகின்றனர். ஊழ்வலி உண்மையினால் சுபத்திரன் கடைக்குச் சீவகன் செல்கின்றான்.சீவகனை தன் மனைக்கு அழைத்துச்சென்றவுடன் அவனைக் கண்ட அளவிலேயே கேமசரி நாணமுறுகிறாள்.இதைக் கண்ட சுபத்திரன் கேமசரியைச் சீவகனுக்கு மணம் செய்து வைத்தான்.இக்கேமசரியுடன் சீவகன் இரு திங்கள்கள் தங்கியிருந்து ஆரா இன்பம் அருந்திவிட்டு,கேமசரி அறியா வண்ணம் அவ்விடத்தை விட்டு அகன்றவுடன் , அவன் செல்வது போல் கனவு காண்கிறாள்.

***’’நாளினும் பெருகு கின்ற***
***நகைமதி யனைய காதற்***
***கேள்வனைக் கனவிற் காணாள்***
***கிளர்மணிப் பூணி நாளே’’ (சீவக.கேம:1506)***

என இப்பாடலில் கேமசரி கண்ட கனவாக ஆசிரியர் கூறுகின்றார். அதாவது மணிகள் இழைத்த கலனணிந்தவளாகிய, தாமரைப் பூப்போன்ற முகத்தையுடையவள், நாள்தோறும் வளர்கின்ற பிறையை யொத்த காதலையுடைய கணவன் தன்னைக் கனவிலே காணதவளானாள், அதாவது கனாக்காண்கின்றவள் அவன் போகக்கண்டாள் என்று நச்சினார்க் கினியர் உரை வகுக்கின்றார்.

**கட்டியங்காரனின் காமக்கிழத்திக் கண்ட கனவு**

கட்டியங்காரன் சீவகனிடம் அரசினை இழக்கப் போகின்றான், என்பதை வலியுறுத்தும் வகையிலே அவனது காமக்கிழத்தி கனவு காணுவதாகவும் ஓர் குறிப்பு கூறப்பட்டுள்ளது.

***''போக மகளிர் வலக்கண்க டுடித்த பொல்லாக் கனாக்***
***கண்டாள்,ஆக மன்னற் கொளிமழுங்கிற் றஞ்சத்தக்க குரலினாற்***
***.....................மண்ணும் விண்ணு மதிர்ந்தனவே***
***(சீவக.மண்:2173)***

அதாவது , கட்டியங்காரனின் காமக்கிழத்தியரின் வலக்கண்கள் துடித்தன.அவர்கள் தீய கனவுகளைக் கண்டனர்.கட்டியங்காரனுக்கு மேனி ஒளி மங்கியது.கூகையானது , அரண்மனையிலே பகற் காலத்திலே அஞ்சத்தக்க குரலினால் குழறிக் கூவ, வெற்றி முரசம் ஒலி அவிய , வானத்தினின்றும் குருதி மழை பெய்ய நிலமும் வானமும் அந்நாடெங்கும் அதிர்ந்தன,என்ற இக்குறிப்பின் பிரதிபலிப்பாக வெப்பமுற விழித்துக் கண்டார் அச்சமுறச் செவ்வாயை மடித்து, முகில் நிறைந்த வானிலிருந்து திங்கள் வீழ்வது போல கட்டியங்காரன் வீழ்கின்றான் என தன் காவியத்தில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**தொகுப்புரை**

இக்காப்பியத்தில் பெண்கள் கண்டுள்ள கனவே ஒவ்வொரு இடத்திலும் முக்கிய பயணமாக அமைந்துள்ளதை நம்மால் அறிய முடிந்தது. தமிழ்க் காபியங்களில் கனவு,காப்பிய மாந்தர்களின் மனம் பற்றித் தெரிவிக்கவும்,காப்பிய மாந்தரின் இறப்பைத் தெரிவிக்கவும் பெரும்பாலும் கையாளப்பட்டிருப்பது இவ்வாய்வால் அறியப்பட்ட உண்மைகளுள் ஒன்றாகும்.

சிந்தாமணிக் கனவு,பின்னர் நடைபெறக் கூடியதை முன்னரே அறிவிக்கும் அறிவிப்பாகவும் அறிகுறியாகவும் அமைந்துள்ளது. சிந்தாமணி காப்பியப் பெண்களான விசையை, கேமசரி, கட்டியங்காரனின் காமக்கிழத்தியர் ஆகியோரின் கனவுகள் பின்னர் நிகழவுள்ள நிகழ்வை அழகாக எடுத்தியம் பியிருப்பதை இக்கட்டுரையின் வாயிலாக நாம் கண்டோம்.